ஜி.ஆர்.டி மகாலட்சுமி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

வந்தே மாதரம் - மாணவர் தமிழ் மன்றத் தேர்வு

இப்பள்ளியில் LKG முதல் 10-ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் 'Excellent Exams' நிறுவனத்தினர் நடத்தும் வந்தே மாதரம் - மாணவர் தமிழ் மன்றத் தேர்வினை நல்ல முறையில் எழுதிவருகின்றனர்.

இத்தேர்வில் 90 மதிப்பெண்களுக்கு மேல் எடுக்கும் மாணவர்களுக்கு 'இளம் தமிழறிஞர்' என்ற விருதினையும், சான்றிதழையும் அளித்து சிறப்பு செய்கின்றனர். தொடர்ந்து 100 மாணவர்களுக்கு மேல் 90% மதிப்பெண்கள் எடுத்திருந்தால் அப்பள்ளி தமிழ்மொழிக்கு ஆற்றிய நற்சேவையைப் பாராட்டி 'தங்கத்தமிழ் வளர்பள்ளி' என்ற விருதினையும், சான்றிதழையும் வழங்கிச் சிறப்பு செய்கின்றனர்.

நம் பள்ளி தொடர்ந்து <u>**பதிமூன்று**</u> வருடங்களாக இவ்விருதினைப் பெற்று வருவது பெருமைக்குரியச் செய்தியாகும்.

தமிழ்மொழிக்கு ஆற்றிய நற்சேவையைப் பாராட்டி <u>**பள்ளி முதல்வர்**</u> அவர்களுக்கு '<u>**சிறந்த தமிழ்மொழிப்பற்றாளர்**</u>' என்ற பாராட்டுச் சான்றதழும், விருதும் வழங்கப்படுகிறது. இவ்விருது <u>**தாளாளர்**</u> அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

சிறந்த முறையில் மாணவர்கள் தயார் செய்த <u>**தமிழாசிரியர்களுக்கு**</u>, '<u>**தமிழ் வளர் செம்மல்**</u>' என்ற பாராட்டுச்சான்றிதழும் விருதும் வழங்கப்படுகிறது.